வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்,
ந.க.எண். 3207/அ4/2023 நாள் : .07 .2023

-----

பொருள் : பள்ளிக் கல்வி – மிதிவண்டிகள் வழங்கும் திட்டம் – 2023–2024 ஆம் கல்வியாண்டு – 11ம் வகுப்பு பயிலும் அனைத்து இன மாணவ / மாணவியர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்குவதற்கான இறுதி தேவைப்பட்டியல் மற்றும் 2022–2023ஆம் கல்வியாண்டின் இருப்பு விவரம் – சார்பாக.

பார்வை : சென்னை –6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (தொழிற்கல்வி) செயல்முறைகள் ந.க.எண்.045176/இ/இ1/2023, நாள்.26.07.2023

------

பார்வையில் 1 ல் சென்னை தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (தொழிற்கல்வி) அவர்களின் செயல்முறை கடிதத்தின் படி அரசு / அரசு நிதியுதவி பெறும் மற்றும் பகுதி நிதியுதவி பெறும் பள்ளிகளில் சுயநிதி அடிப்படையில் நடைபெறும் வகுப்புகள் ஆகியவற்றில் 11 ஆம் வகுப்பில் பயிலும் அனைத்து மாணவ / மாணவியர்களுக்கு 2022–2023 மற்றும் 2023–2024 ஆகிய இரண்டு கல்வியாண்டிற்கும் சேர்த்து மிதிவண்டிகள் வழங்க ஆணை பெறப்பட்ட நிலையில் தற்போது 2022–2023 ஆம் கல்வியாண்டில் 11 ஆம் வகுப்பு பயின்ற அனைத்து இன மாணவ / மாணவிகளுக்கும் மிதிவண்டிகள் வழங்குவதற்கான கொள்முதல் ஆணைகள் ஆவான் மிதிவண்டி நிறுவனத்திற்கு வழங்கப்பட்டு, அதன் அடிப்படையில் மிதிவண்டிகள் ஆவான் மிதிவண்டி நிறுவன முகவர்கள் மூலம் வேலூர் மாவட்டத்தில் உள்ள பள்ளிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

இதனைத் தொடர்ந்து 2023-2024 ஆம் கல்வியாண்டிற்கான இறுதித் தேவைப்பட்டியல் சென்னை பள்ளிக் கல்வி இணை இயக்குநர் (தொழிற்கல்வி) அவர்களுக்கு மின்னஞ்சல் மூலம் அனுப்ப வேண்டி உள்ளதால் 2022-2023 ஆம் கல்வியாண்டிற்கான இருப்பு விவரங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தில் பூர்த்தி செய்து 28.07.2023 மாலை 5.00 மணிக்குள் இவ்வலுவலக 'அ4' பிரிவு எழுத்தரிடம் ஒப்படைக்குமாறு அனைத்து வகை அரசு / அரசு நிதியுதவி பெறும் மற்றும் பகுதி நிதியுதவி பெறும் பள்ளிகளில் சுயநிதி பள்ளி தலைமை ஆசிரியர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்

**" இது மிக மிக அவசரம் காலதாமதம் ஏற்படின் பள்ளி தலைமை ஆசிரியரே முழு பொறுப்பேற்க நேரிடும் "**

இணைப்பு- படிவம் 1 மற்றும் 2

27/7/23

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர் மாவட்டம்.

27/07/23

பெறுநர்
அரசு / அரசு நிதியுதவி பெறும் மற்றும் பகுதி நிதியுதவி பெறும் பள்ளிகளில் சுயநிதி பள்ளி தலைமை ஆசிரியர்கள்

.